( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

**CC No. 154/2023**

**P.W. 1**

Name : Sagundhala
Father/Husband Name : Madurai
Caste :
Calling :
Religion :
Age :
Date : 18-03-2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025.

**எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரி வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

1. என் தந்தை பொன்னுசாமி என்பவருக்கு என்னுடன் சேர்ந்து 3 மகள்கள் மற்றும் ஒரு மகன். அண்ணன் பெயர் சுப்ரமணி. எனது தந்தைக்கு சொந்தமான 2 ஏக்கர் 20 செண்ட் நிலத்தை எங்கள் நால்வருக்கும் கொடுப்பதாக என் அண்ணனும் அப்பாவும் சொன்னார்கள். எனது அப்பாவும் அண்ணனும் இறந்து விட்டார்கள். அந்த இடத்திற்கான வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தபோது பாதி இடத்தை விற்கப்பட்டதாக அதில் இருந்தது. **விற்பனை செய்த இடத்தின் ஆவணம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என் தந்தை பொன்னுசாமிக்கு சுப்ரமணி மட்டும் தான் வாரிசுதாரர் என்று வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார்கள். செங்கல்பட்டு காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். **25/11/2021 அன்று செங்கல்பட்டு காவல் துறை கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புகை ரசீது ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனால் எதிரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்து உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S/d- N.Anupriya, 18.03.2025

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.